நீதி, பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள், உள்ளூராட்சி மற்றும் தொழில் அமைச்சு.

**கட்டளைச்சேவகர் மற்றும் எழுத்தாணை நிறைவேற்றுநர்/ நீதிமன்ற கட்டியக்காரர் மற்றும் வாயிற்காப்பாவர் பதவிக்குரிய தரம் II இன் அலுவலர்களுக்கான இரண்டாம் வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை நடாத்தல்– (2024)**

1.0. அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் 2016.07.26 ஆம் திகதிய PSC/EST/06-01-32/01/2016 ஆம் இலக்க அங்கீகாரம் பெறப்பட்டுள்ள ஆட்சேர்ப்பு நடவடிக்கைமுறையின் 08 ஆம் பந்தியின் ஏற்பாடுகளுக்கு அமைய கட்டளை சேவகர் மற்றும் எழுத்தாணை நிறைவேற்றுநர்/ நீதிமன்ற கட்டியக்காரர் மற்றும் வாயிற்காப்பவர் ஆகிய பதவிகளின் தரம் II அலுவலர்களுக்கான வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை, நீதித்துறை சாராத அலுவலர்களின் பயிற்சி நிலையத்தினால் 2024 டிசம்பர் மாதம் கொழும்பில் நடாத்தப்படும் என இத்தால் அறியத்தரப்படுகின்றது.

**2.0.** பரீட்சைக்கு தோற்றுவதற்கு கட்டளைச்சேவகர் மற்றும் எழுத்தாணை நிறைவேற்றுனர்/ நீதிமன்ற கட்டியக்காரர் மற்றும் வாயிற்காப்பவர் பதவிகளின் III ஆம் தரத்தில் நியமனமனம் ஒன்றை பெற்றுக்கொண்டுள்ள அலுவலராக இருத்தல் வேண்டும்.

**3.0.** விண்ணப்பிக்கவுள்ள விண்ணப்பதாரர்கள் இவ்வமைச்சின் www.moj.gov.lk என்ற உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் பிரவேசித்து உரியவாறு பூரணப்படுத்திய விண்ணப்ப படிவங்களை 2024.11.17 ஆம் திகதியோ அல்லது அதற்கு முன்னரோ இணையத்தின் ஊடாக சமர்ப்பித்தல் வேண்டும்.

**4.0.** இப்பரீட்சைக்கான விண்ணப்பப்பத்திரங்களை 2024.10.24 ஆம் திகதியிலிருந்து 2024.11.17 ஆம் திகதி வரைக்கும் இவ்வமைச்சின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் வெளியிடப்பட்டிருக்கும்.

**5.0.** அரசகரும மொழி கொள்கையின் குறிக்கோள்களுக்கு ஏற்ப சகல அலுவலர்களும் தமது விண்ணப்பங்களை அரசகரும மொழிகளில் பூரணப்படுத்தல் வேண்டும்.

**6.0.** விண்ணப்பங்கள் பூரணப்படுத்தப்படுகின்ற போது மிக கவனமாக சரியான தகவல்கள் வழங்கப்பட வேண்டியதுடன் தகவல்கள் பூரணப்படுத்தப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

7.0. பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபத்திற்குள் பரீட்சை மண்டப மேற்பார்வையாளர் திருத்தியடையும் வகையில் தனது சொந்த ஆள் அடையாளத்தினை தமது தேசிய அடையாள அட்டை அல்லது செல்லுபடியான கடவுச்சீட்டு அல்லது செல்லுபடியான சாரதி அனுமதிப்பத்திரத்தின் மூலம் உறுதி செய்துகொள்ளல் வேண்டும்.

8.0. பரீட்சை நடாத்துவது தொடர்பாக விதிக்கப்பட்டுள்ள சட்ட விதிகளுக்கு அமைய அபேட்சகர் ஒருவர் தகுதியற்றவர் என தெரியவரும் பட்சத்தில் பரீட்சைக்கு முன்னர் அல்லது பரீட்சை நடைபெறும் போது அல்லது பரீட்சைக்கு பின்னர் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவரின் பரீட்சை அபேட்சகர் என்ற அந்தஸ்த்து இரத்துச் செய்யப்பட முடியும் என்பதுடன் விண்ணப்பதாரருக்கு பரீட்சை அனுமதி பத்திரம் வழங்கலானது அவர் பரீட்சைக்கு தோற்றுவதற்கான தகைமையை பெற்றுள்ளார் என்பதற்கான அங்கீகாரமாக கருதக்கூடாது.

9.0. இப்பரீட்சைக்கு முதல் தடவையாக விண்ணப்பிக்கின்ற விண்ணப்பதாரிகள் பரீட்சைக் கட்டணம் செலுத்த வேண்டியதில்லை.

9.1. எனினும் அடுத்த தடவைகளில் குறித்த பரீட்சைக்கு தோற்றுவதாயின் ரூபா 600 பணத்தை பரீட்சைக் கட்டணமாக நீதி அமைச்சின் கொழும்பு 12, மக்கள் வங்கியின் நகர மத்திய கிளையின் கணக்கு இலக்கம் 176100199025184 இன் கீழ் செலவு வைக்கும் வகையில் பணமாக செலுத்தி விண்ணப்பதாரியின் பெயரில் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை ஸ்கேன் செய்து பெற்றுக்கொண்ட மென்பிரதியினை இணையவழிமுறையூடாக சமர்பிக்கும் விண்ணப்பப்படிவத்தின் உரிய இடத்தில் இணைக்க வேண்டும் தரவேற்றம் (Upload) செய்தல் வேண்டும். பற்றுச்சீட்டின் நிழற்பிரதியொன்றை தம்வசம் வைத்திருப்பது பயனுள்ளதாகும்.

**க.வே: மேற்படி கட்டணம் செலுத்தப்படாத விண்ணப்பதார்களுக்கு பரீட்சை அனுமதிப்பத்திரம் வழங்கப்படமாட்டாது. எந்தவிதமான காரணத்திற்காகவும் இக்கட்டணமானது மீள செலுத்தப்படாது என்பதுடன் அக்கட்டணமானது வேறு பரீட்சைக்காக மாற்றவும் இடமளிக்கப்படமாட்டாது.**

10.0. இப் பரீட்சை சிங்களம் மற்றும் தமிழ் ஆகிய மொழிகளில் நடைபெறும். பரீட்சார்த்தி அம்மொழிகளுல் ஏதாவது ஒரு மொழியூடாக பரீட்சைக்கு தோற்ற முடியும். பரீட்சைக்காக விண்ணப்பிக்கும் மொழி மூலத்தை மாற்ற இடமளிக்கப்படமாட்டாது.

11.0. பரீட்சை அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொண்ட அலுவலர்களுக்கு பரீட்சைக்கு தோற்றுவதற்கு இயலுமாகின்ற வகையில் திணைக்கள தலைவரூடாக கடமை லீவு வழங்கப்படல் வேண்டும். பரீட்சைக்கு தோற்றுவதற்கு பயணிப்பதற்கான பயணக் கொடுப்பனவு வழங்கப்படமாட்டாது.

12.0. மேற்படி வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சைக்கான உரிய பரீட்சை நடவடிக்கைமுறை மற்றும் விடய பரிந்துரை பின்வருமாறு அமையும் (மேலதிக தகவலுக்காக கட்டளை சேவகர் மற்றும் எழுத்தாணை நிறைவேற்றுனர்/ நீதிமன்ற கட்டியக்காரர் மற்றும் வாயிற்காப்பவர் பதவிக்கான ஆட்சேர்ப்பு நடவடிக்கைமுறையின் 8 ஆம் பந்தியைப் பார்க்கவும்.)

**12.1 <u>இரண்டாம் வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை</u>**

<u>பரீட்சை முறைமை</u>

விண்ணப்பதார்கள் பின்வரும் பாடங்களை உள்ளடக்கியதாக 50 பல்தேர்வு வினாக்களை கொண்ட எழுத்துமூல பரீட்சைக்கு தோற்ற வேண்டியதுடன் அனைத்து வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.

குறித்த பாடத்தில் சித்தியடைவதற்கு மொத்த புள்ளிகளுள் ஆகக்குறைந்தது நூற்றுக்கு நாற்பது வீதத்தினை (40%) பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

| பாடம் | புள்ளி | நேரம் |
|---|---|---|
| அலுவலக முறைமை, தாபன விதிக்கோவை மற்றும் நிதி முறைமை | 100 | 01 மணித்தியாலம் |

<u>பாட பரிந்துரை</u>

அலுவலக முறைமை, தாபன விதிக்கோவை மற்றும் நிதிமுறைமை

தாபன விதிக்கோவையின் III, V, VI, VIII, XIV இலக்க அத்தியாயங்கள்

நிதி ஒழுங்குவிதிகள் அத்தியாயம் IV - நி.பி. 170,

அத்தியாயம் VII - நி.பி. 420, 445, 485

13.0. பரீட்சைக்கு தோற்றும் அனைத்து பரீட்சார்த்திகளின் பெறுபேறுகளையும் உள்ளடக்கிய பெறுபேற்று ஆவணம் இவ்வமைச்சின் இணையத்தளத்தில் வெளியிட நடவடிக்கை எடுக்கப்படும்.

14.0. சிங்களம் மற்றும் தமிழ் மொழி மூலம் வெளியிடப்படும் இந்த அறிவித்தலின்மொழிகளுக்கு இடையே யாதாயினும் பொருத்தப்பாடின்மை அல்லது உடன்பாடின்மை ஏற்படும் பட்சத்தில், அவ்வாறான சந்தர்ப்பத்தில் சிங்கள மொழி மூலமான அறிவித்தலே மேலோங்கும் என்பதனை கவனத்தில் கொள்ளவும். மேலும்

இதில் குறிப்பிடப்படாத வேறெதேனும் விடயம் காணப்படின் அது தொடர்பில் நீதி அமைச்சின் செயலாளரினால் தீர்மானம் மேற்கொள்ளப்படும்.

15.0. மேலும், இதுதொடர்பான தகவல்களை பெற்றுக்கொள்ள நீதித்துறை சாராத அலுவலர்களின் பயிற்சி நிலையத்தின் தொலைபேசி இலக்கமான 011-2076204 இற்கு அழைப்பினை ஏற்படுத்தவும்.